மார்த்தாண்டத்தில் நடந்த முகாமில்

# ₹2.5 கோடி கல்விக்கடன் உதவி

**கலெக்டர் அழகுமீனா வழங்கினார்**


► மார்த்தாண்டத்தில் நடந்த கல்விக்கடன் முகாமில் கலெக்டர் அழகுமீனா பேசினார்.

நாகர்கோவில், ஆக.30- கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற கல்விக் கடன் முகாமில் ரூ.2.5 கோடி மதிப்பில் கடனுதவிகளை மாவட்ட கலெக்டர் அழகுமீனா வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் அனைத்து வங்கிகளும் இணைந்து நடத்திய கல்விக் கடன் முகாம் மார்த்தாண்டம் நேசமணி கல்லூரி கலையரங்கில் நேற்று நடைபெற்றது. முகாமில் மாவட்ட கலெக்டர் அழகுமீனா கலந்து கொண்டு, மாணவ மாணவியர்களுக்கு கல்விக்கடனுதவிகள் வழங்கி, பேசியதாவது:

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வி முடித்து உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள் இடைநிற்றலை தவிர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக அரசுப்பள்ளிகளில் 12ம் வகுப்பு பயின்று, மேற்படிப்பு செல்பவர்களுக்கு ரூ.1000 வழங்கும் திட்டம், வரும் மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு வழிகாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதோடு, அவர்கள் மேற்படிப்பிற்கு எந்த பாடப்பிரிவினை தேர்ந்தெடுக்கலாம் என்ற வழிகாட்டுதலையும் வழங்கி வருகிறது.

12ம் வகுப்பு முடித்து, மேற்படிப்பிற்காக கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாட்டின் பிற மாவட்டங்கள், பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு கல்வி பயில செல்லும் மாணவ மாணவியர்களின் நலனுக்காக இதுபோன்ற கல்விக்கடன் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இன்றைய கல்விக்கடன் முகாமில் மொத்தம் 32 கல்லூரிகளிலிருந்து மருத்துவம், செவிலியர், பாரா மெடிக்கல், கலை அறிவியல் மற்றும் பொறியியல் பயிலும் 138 மாணவ மாணவியர் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இன்று நடைபெற்ற முதல் கட்ட கல்விக்கடன் முகாமில் மேற்படிப்பு பயிலும் 26 மாணவ மாணவியர்களுக்கு இந்தியன் ஓவர்சிஸ் வங்கி, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, இந்தியன் வங்கி, கனரா வங்கி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா, பேங்க் ஆப் பரோடா உள்ளிட்ட வங்கிகள் மூலமாக ரூ.2.5 கோடி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கலெக்டர் அழகுமீனா, 12 வங்கிகளின் சார்பாக அமைக்கப்பட்டு இருந்த அரங்கங்களை பார்வையிட்டார். முகாமில் கல்லூரி முதல்வர் டாக்டர் பிஜி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், செய்யது உசேன் வங்கியாளர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.